**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.24
https://ngmtamil.in/

# பழந்தமிழர் கடவுள் கொள்கையின் வளர்ச்சி நிலை: சைவ சித்தாந்தம்

**ஜெ. கிருஷ்ணவேணி**

ஆய்வு மாணவர், சைவ சித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை — 600 005

**ஆய்வுச் சுருக்கம்:** பழந்தமிழரின் கடவுள் கொள்கை, திருமுருகாற்றுப்படையின் "இயவுள்" கருத்திலிருந்து தொடங்கி, காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தர், நாயன்மார்கள் வழியாக வளர்ந்து, மெய்கண்ட சாத்திரங்களில் தத்துவ முழுமை பெற்றது. திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் அனுபவமும் ஞானமும் ஆகிய ஒரே தமிழ் மரபின் இரு வெளிப்பாடுகளாகும். இதனால், சைவ சித்தாந்தம் தமிழ் மரபில் வேரூன்றிய சிந்தனையே என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

**திறவுச்சொற்கள்:** பழந்தமிழர் · சங்க இலக்கியம் · முருகன் வழிபாடு · காரைக்கால் அம்மையார் · நால்வர் · நாயன்மார் · திருமுறைகள் · மெய்கண்டர் · சிவஞானபோதம் · சைவ சித்தாந்தம் · அருள் · தமிழ் மரபு

## 1. முன்னுரை மற்றும் ஆய்வு முறைமை

தமிழர்களின் கடவுள் கொள்கை ஒரு ஒருங்கிணைந்த, படிப்படியான வளர்ச்சிப் பாதையைக் கொண்டுள்ளது. வெறும் சமய நம்பிக்கையாக மட்டுமல்லாது, வாழ்க்கை தத்துவமாக, இலக்கியமாக, இசையாக வெளிப்பட்டு வந்துள்ள இந்த மரபு, சங்க காலத்தில் "இயல்பான இறைக்கொள்கை" ஆகவும், பக்தி காலத்தில் அனுபவமாகவும், மெய்கண்டார் காலத்தில் தத்துவமாகவும் முதிர்ந்துள்ளது.

சைவ சித்தாந்தம் முதன்மையாக வடமொழி ஆகம மரபிலிருந்து உருவானது என்று ஒரு தரப்பு வாதிக்கிறது[1]. இந்த வாதத்திற்கு மாறாக, திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் ஒரே தமிழ் மரபின் தொடர்ச்சியான இரண்டு முகங்கள் என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

[1]Alexis Sanderson, "The Śaiva Age: The Rise and Dominance of Śaivism during the Early Medieval Period," in *Genesis and Development of Tantrism*, ed. Shingo Einoo (Tokyo: Institute of Oriental Culture, University of Tokyo, 2009), pp. 41–349; the argument cited here appears at p. 303.

### 1.1 ஆய்வு முறைமை (Methodology)

இவ்வாய்வு வரலாற்று–ஒப்பீட்டு முறையை (Historical–Comparative Method) அடிப்படையாகக் கொண்டதாகும். சங்க இலக்கியங்கள், பன்னிரு திருமுறைகள் மற்றும் மெய்கண்ட சாத்திரங்கள் முதன்மை ஆதாரங்களாகவும் (Primary Sources), முனைவர் வை. இரத்தினசபாபதி, முனைவர் நல்லூர் சா. சரவணன், கே. சிவராமன் ஆகியோரின் நூல்கள் இரண்டாம் நிலை ஆதாரங்களாகவும் (Secondary Sources) பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் மையக் கேள்விகள் (Research Questions):**

(அ) சங்ககால இறைக் கொள்கைகளிலிருந்து சைவ சித்தாந்தம் எவ்வாறு இயல்பான வளர்ச்சியடைந்தது?

(ஆ) இவ்வளர்ச்சி தமிழ் மரபின் தொடர்ச்சியா அல்லது வெளியாரால் திணிக்கப்பட்ட சிந்தனையா?

### 2. சங்க இலக்கியத்தில் வழிபாட்டுத் தொன்மமும் சைவ சித்தாந்தத்தின் தத்துவ வேர்களும்

சங்க காலம் (கி.மு 100 இருந்து) என்பது நிலத்தையும் மனிதனையும் முதன்மையாகக் கொண்ட ஓர் அற வாழ்வியலைக் கொண்டிருந்தது. தொல்காப்பியர் நிலத்தை ஐந்தாகப் பகுத்து, ஒவ்வொன்றுக்கும் உரிய தெய்வங்களை வகுக்கிறார்[2]:

*"சேயோன் மேய மைவரை உலகமும்*

*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*

*மாயோன் மேய காடுறை உலகமும்*

*வருணன் மேய பெருமணல் உலகமும்..."*

*— தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா 5*

நெய்தலுக்கு வருணன் ஆகியோர் தெய்வங்களாக வழிபடப்பட்டனர். இவற்றுள் முருக வழிபாடே தமிழரின் தத்துவார்த்தக் கடவுள் கொள்கையின் தொடக்கமாகும். திருமுருகாற்றுப்படையில் முருகன் “பெரும்பெயர் இயவுள்” எனப் போற்றப்படுகிறார். இவ்வியவுள் கருத்தே பிற்காலத்தில் காரைக்கால் அம்மையாரால் சைவ அனுபூதியாக வளர்ந்து, சங்க மரபின் மூன்று தொழில்கள் சைவ சித்தாந்தத்தின்

[2]தொல்காப்பியர், *Tolkāppiyam*, பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா 5. Critical edition with commentary: U. V. Cāminātaiyar, ed., *Tolkāppiyam: Poruḷatikāram* (Chennai: Kabeer Press, 1920). Tamil text cited is standard canonical version.

ஐந்தொழில் கோட்பாடாக முழுமை பெற்றன. சிவஞானபோதத்தின் முதல் சூத்திரமே இந்த உலகின் தோற்றம், ஒடுக்கம் ஆகியவற்றைக் கொண்டு பதியின் (இறைவனின்) இருப்பை நிறுவுகிறது[3]:

*"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்*

*தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்*

*அந்தம் ஆதி என்மனார் புலவர்"*

*— சிவஞானபோதம், சூத்திரம் 1*

### 2.1 திருமுருகாற்றுப்படை காட்டும் சைவ சித்தாந்தம்

பத்துப்பாட்டின் முதல் நூலான திருமுருகாற்றுப்படை, உலகியல் ஆற்றுப்படை மரபிலிருந்து மாறுபட்டு, அருள் செல்வத்தை நோக்கி ஆன்மாவை வழிநடத்தும் ஆன்மீகப் புரட்சியாக விளங்குகிறது. அதன் முதல் அடிகளிலேயே நக்கீரர் தமிழரின் உலகப் பொதுமை அறத்தையும் சைவ சித்தாந்தக் கருத்துகளையும் விதைக்கிறார்:

*"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு*

*பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு..."*

*— திருமுருகாற்றுப்படை, அடிகள் 1–2*

"உலகம் யாவையும்"[4] என்ற கருத்து, இறைவனின் அருள் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது என்பதை உணர்த்துகிறது. சூரியன் இருளை நீக்குவது போல, இறையருள் உயிரின் அறியாமை மற்றும் ஆணவத்தை நீக்குகிறது. திருமுருகாற்றுப்படை, அருள் வழியாக உயிர் இறைவனை அடையும் நெறியை உணர்த்துகிறது. சங்ககாலத் தமிழர் இறைக்கொள்கையின் மைய அம்சங்களான இயற்கையில் இறை, வாழ்க்கை வழிபாடு, அன்பு வழி இறையடைதல், அருளனுபவம் ஆகியவையே பிற்கால பக்தி இயக்கத்தின் அடித்தளமாக அமைந்தன.

### 3. காரைக்கால் அம்மையார்: இயவுளிலிருந்து கூத்தப்பிரானுக்கு

கி.பி. 3-ஆம் நூற்றாண்டு, சங்ககால இயவுள் கொள்கை சைவமாக உருமாறிய திருப்புமுனைக் காலமாகும். இக்காலத்தின் தத்துவப் புரட்சியாளரான காரைக்கால் அம்மையார், தமிழர் இறைக் கொள்கைகளைச் சைவ அடிப்படையில் ஒருங்கிணைத்து ஈசனை முழுமுதற் கடவுளாகப் பாடினார்.

---

[3]மெய்கண்டார், Śivajñānabodham, சூத்திரம் 1. For critical edition with commentary, see: நல்லூர் சா. சரவணன், Meykaṇṭār Aruḷiya Śivajñānabodham Vāḻviyal Āyvu Viḷakkam (Chennai: Nanbargal Veliyeedu, 2008).

[4]நக்கீரர், *Tirumurugāṭṭuppaṭai*, அடி 1: "உலகம் யாவையும் தாம் உளராக்கலும்." Caṇmukam Piḷḷai, ed., *Pattuppāṭṭu*, p. 1.

இதனால் தமிழ்ச் சைவ மரபின் தொடக்கப் பெண் சான்றோராகவும் சைவத்தின் தாயாகவும் போற்றப்படுகிறார். திருமுருகாற்றுப்படையில் முருகனிடம் காணப்பட்ட "இயவுள்" (இயங்குகின்ற கடவுள்) தன்மையை, அம்மையார் ஈசனாகக் கண்டு உலகப் பெருநடனமாகிய "கூத்தப்பிரான்" (நடராசர்) வடிவில் வெளிப்படுத்தினார்.

அவரது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களில், உலக இயக்கமே இறை நடனம் என்ற சிந்தனை ஆழமாகப் பதிகிறார்[5]:

> *"அண்ட முற நிமிர்ந்து அனல் ஆடும் எங்கள் அப்பன் இடம் திருஆலங்காடு..."*
>
> *— திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், பாடல் 1*

இங்கு ஈசனின் நடனம் வெறும் உடல் அசைவு அல்ல; பிரபஞ்ச அண்டங்கள் அனைத்தையும் இயக்கும் பேராற்றலின் வெளிப்பாடாகும். இவ்வாறு நக்கீரரின் "இயவுள்" தத்துவம், காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் "ஆடும் கூத்தப்பிரான்" என்ற சைவத் தத்துவ வடிவத்தைப் பெறுகிறது.

**4. திருஞானசம்பந்தர் கட்டமைத்த சைவம்: தமிழ் மரபு**

திருஞானசம்பந்தர் சைவ சமயத்தை வெறும் வழிபாட்டு நெறியாக மட்டும் விட்டுச் செல்லவில்லை — அதனை ஒரு தமிழ் அடையாளமாக, ஒரு சமூக இயக்கமாக, ஒரு தத்துவ கட்டமைப்பாக உருவாக்கினார். சம்பந்தரின் "காதலாகிக் கசிந்து"[6] என்ற வெளிப்பாடு அகப்பொருள் மரபின் நேர்முகமான இறையியல் மாற்றம்.

சம்பந்தரின் மிக முக்கியமான பங்களிப்பு என்னவென்றால், அவர் சைவத்தை "தமிழர் சொந்த சமயம்" என்று முத்திரையிட்டார். பேராசிரியர் வை. இரத்தினசபாபதி அவர்கள் சுட்டிக்காட்டுவதுபோல்[7], மெய்கண்டர் தத்துவமாக நிறுவிய பதி–பசு–பாசக் கோட்பாட்டின் அனுபவ அடிப்படை சம்பந்தர் பதிகங்களிலேயே காணப்படுகிறது. சமணம், பௌத்தம், வைதீகம் வலியுறுத்திய தவம் மற்றும் சடங்குகளுக்கு மாற்றாக, தமிழில் இறைவனைப் பாடிப் போற்றுவதன் மூலம் வினை நீங்கி இறையருளைப் பெறலாம் எனச் சம்பந்தர் வலியுறுத்தினார்.பல பதிகங்களின் இறுதியில் இடம்பெறும் "திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதுஆமே எளிதாமே"[8] என்ற

---

[5]காரைக்கால் அம்மையார், *Tiruvālaṅkāṭṭu Mūtta Tiruppatiham*, பாடல் 1: "அண்ட முற நிமிர்ந்து அனல் ஆடும் எங்கள் அப்பன்..." Text in: Arunachalam, *Kāraikkāl Ammaiyār*, p. 112.

[6]திருஞானசம்பந்தர் தேவாரம், *Tēvāram*, மூன்றாம் திருமுறை, 49-ஆம் பதிகம், முதல் பாடல்: "காதலாகிக் கசிந்துள் கரைந்து..." See:Panniru Tirumurai Padalgal (Chennai: Uma Padhippagam, 2004).

[7]வை. இரத்தினசபாபதி, *Tirumuṟait Teḷivē Śivajñānabodham* (Chennai: University of Madras, 2004), pp. 18–22.

[8] திருஞானசம்பந்தர், திருமுறை 1, தேவாரம் — தோடுடைய செவியன் (பாடல் 10), சீர்காழி - பிரமபுரம் தலம், சைவம்.org இணையதளம்

சொல், பதிகம் பாடுவதன் மூலம் வினை நீங்கி வாழ்வு செம்மையடையும் என்ற சமயப் புரட்சியைத் திருஞானசம்பந்தர் முன்வைத்தார். இவ்வாறு தமிழ்மொழி, பத்தி, இறையருள் ஆகியவற்றின் வழி மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் நெறியை அவர் வலியுறுத்தினார்.

**4.1 தமிழர்களின் அக மரபே சைவத்திற்கான சன்மார்க்க வழி**

தமிழ் இலக்கிய மரபில் அகம் என்பது வெறும் காதல் இலக்கியமன்று — அது இறை-ஆன்மா உறவை விளக்கும் ஒரு தத்துவ மொழி. சங்க காலத்தில் தலைவன்-தலைவி உறவு வழியாக வெளிப்பட்ட இந்த உள்ளுணர்வு, திருஞானசம்பந்தரால் "உள்ளம் கவர் கள்வன்"[9] என்ற வெளிப்பாட்டில் இறையியல் ஆழம் பெறுகிறது. மாணிக்கவாசகரோ இந்த மரபைத் திருக்கோவையாரில் முழுமையாக சன்மார்க்க நெறியாக்குகிறார்.

**4.2 உள்ளம் கவர் கள்வன் — சம்பந்தரின் அகவியல் இறையியல்**

சங்க அகமரபில் தலைவன் "கள்வன்" போல தலைவியின் உள்ளத்தைக் கவர்வான். அதே உவமையைத் திருஞானசம்பந்தர் சிவனுக்குப் பொருத்தி "உள்ளம் கவர் கள்வன்" எனப் பாடுகிறார். இது காஷ்மீர சைவ அத்வைதமோ, வேத மரபின் ஆத்மா–பிரம்மம் தத்துவமோ அல்ல; தமிழ் அகம் மரபிலிருந்து உருவான தனித்துவமான இறையியலாகும். இதுவே காரைக்கால் அம்மையார் "அருளால் மெய்ப்பொருளை நோக்குதல்" [10] என்று தத்துவமொழியில் சொல்வதன் அனுபவ அடிப்படை.

**5. மெய்கண்டாரின் "அன்பின் தொழு" — சங்க அகம் மரபின் தத்துவ முடிவு**

சிவஞானபோதத்தின் பன்னிரண்டாம் சூத்திரம் — "அத்துவிதி அன்பின் தொழு" [11] — இது ஒரு சாதாரண வழிபாட்டு கட்டளையல்ல. இது தமிழ் சைவத்தின் முழு தத்துவப் பயணத்தின் இறுதி வாக்கியம். "மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்"[12] என்ற வரியில் மெய்கண்டர் இரண்டை சேர்த்து வைக்கிறார் — நேயம் (அன்பு) உள்ளதும், வேடம் (அடையாளம்) உள்ளதும். இறுதியில் "அன்பில் தொழு" என்று அன்பையே முதன்மையாக வைக்கிறார்.

[9] திருஞானசம்பந்தர் தேவாரம், *Tēvāram*, முதல் திருமுறை, முதல் பதிகம், முதல் பாடல்: "உள்ளம் கவர் கள்வன்..." See: Tiru-muṟai-k-kantam, Vol. I, ed. C. V. Tāmōtaram Piḷḷai (Chidambaram: Caiva Cittānta Mahāsamājam, 1930), p. 1.

[10] காரைக்கால் அம்மையார், *Aṟputa Tiruvantādi*, பாடல் 9. See:Panniru Tirumurai Padalgal (Chennai: Uma Padhippagam, 2004).

[11] முனைவர் நல்லூர் சா. சரவணன், *Śivajñānabodham Vāḻviyal Āyvu Viḷakkam* [சிவஞானபோதம் வாழ்வியல் ஆய்வு விளக்கம்] (Chennai: Vaiyavi Pathippagam, 2019), p. 232. The full verse from Sūttiram 12 reads: "அத்துவிதி அன்பின் தொழு."

[12] நல்லூர் சா. சரவணன், *Śivajñānabodham Vāḻviyal Āyvu Viḷakkam*, p. 232. The verse "மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்" appears in the commentary on Sūttiram 12.

மக்கள் வாழ்க்கையை அவர்கள் பிரச்சினைகளோடு அணுகி மக்கள் வாழ்க்கையை மலர்ச்சிக்கு உட்படுத்தியது சைவ சித்தாந்தம். நல்லூர் சரவணன் கூறுவதுபோல்[13], மெய்கண்டாரும் "அத்துவிதி அன்பின் தொழு" சைவ சித்தாந்தமாக உலகிற்கு வழங்குகிறார்.

### 5.1 சங்க காலம் முதல் மெய்கண்டார் வரை — அன்பின் தொடர்ச்சி

சங்க இலக்கியத்தில் அன்பு என்பது வாழ்க்கையின் மையம். புறநானூற்றில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று உலகையே அன்போடு காண்கிறார் கணியன் பூங்குன்றனார். திருஞானசம்பந்தர் இந்த அன்பை "உள்ளம் கவர் கள்வன்" என்று சிவனுக்கு பொருத்தும்போது, சங்க அகம் மரபு நேரடியாக இறையியலாகிறது. திருமூலர் திருமந்திரத்தில்[14] "அன்பு சிவம்" என்று அறுதியிட்டு கூறும்போது, அன்பும் இறையும் வேறல்ல என்ற தனித்துவமான ஒருமையை தமிழ் மரபின் உள்ளிருந்தே கண்டெடுக்கிறார். மெய்கண்டரோ இந்த முழு மரபையும் தொகுத்து "அன்பின் தொழு" என்ற ஒரே வாக்கியத்தில் தத்துவமாக முடிக்கிறார்[15].

### 5.2 அருளால் மெய்ப்பொருள் நோக்கும் முறைமை

முனைவர் நல்லூர் சா. சரவணன் கூறுவதுபோல்[16], சைவ சித்தாந்தத்தில் "அருள்" என்பது தியானத்தில் கிட்டும் ஒரு திடீர் ஒளியோ அல்லது உலகை விடுத்துச் செய்யும் யோக சாதனயோ அல்ல; மாறாக அது வாழ்க்கையின் ஒவ்வொரு தளத்திலும் வெளிப்படும் உன்னதமான ஒரு "வாழ்க்கை நெறி." அருள் என்பது இரு வேறு தளங்களில் இயங்குகிறது: பொருள்களின் தளத்தில் அது சுயநலமின்றி கையாளும் "ஆற்றலாகவும்", உறவுகளின் தளத்தில் மற்றவரின் வளர்ச்சியை விரும்பி அவரோடு பிணைந்து நிற்கும் "நட்பாகவும்" பரிணமிக்கிறது.

### 6.1 சைவ சித்தாந்தம் – தமிழரின் முழுமையான வாழ்க்கைத் தத்துவம்

சைவ சித்தாந்தம், திருக்குறளின் அடிப்படையிலும் தமிழ் மரபின் ஆழமான வாழ்வியல் சிந்தனைகளின் தொடர்ச்சியிலும் வளர்ந்த சமயத் தத்துவமாகும். திருவள்ளுவர் வலியுறுத்தும் அன்புடைமை, பண்புடைமை ஆகியவை, சைவ சித்தாந்தம் கூறும் மனம் தூய்மை → பண்பு சிறத்தல் → அன்பு ஓங்குதல் → கடவுளை அடைதல் என்ற ஆன்மிகப் பாதையின் அடிப்படையாக அமைகின்றன. எனவே, திருக்குறளும் சைவ சித்தாந்தமும் ஒரே தமிழ் மெய்யியல் மரபின் வெளிப்பாடுகளாகக் காணப்படுகின்றன. மேலும், பழந்தமிழர் அறக்கொள்கையிலும் சைவ

---

[13] நல்லூர் சா. சரவணன், *Śivajñānabodham Vāḻviyal Āyvu Viḷakkam*, p. 26.

[14] திருமூலர், திருமந்திரம் — 10ஆம் தந்திரம், 21. அன்புடைமை, பாடல் 1 (தனிப்பாடல்: "அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்"), சைவம்.org இணையதளம்.

[15] வை. இரத்தினசபாபதி, *Tirumuṟait Teḷivē Śivajñānabodham* [திருமுறைத் தெளிவே சிவஞானபோதம்] (Chennai: University of Madras, 2004), p. 240.

[16] சரவணன், நல்லூர் சா. Śaiva Siddhānta Ceḻumāmaṇikaḷ [சைவ சித்தாந்தச் செழுமாமணிகள்]. Chennai: Vaiyavi Patippakam, 2018. page 72

சித்தாந்தத்திலும் அறம், அன்பு, அருள் ஆகியவை பிரிக்க முடியாத வாழ்வியல் நெறிகளாக விளங்குகின்றன. அறத்தில் நிலைத்து அன்போடு வாழும் மனிதனுக்கு இறையருள் கிட்டுகிறது. எனவே அறம் மனிதனின் செயல், அருள் இறைவனின் பதில்; அறத்தின் நிறைவே அருளும், அருளின் வெளிப்பாடே அறமுமாகும்[17].

K. சிவராமன் தெளிவுபடுத்துவதுபோல் [18] ,தமிழ் சைவத்தின் "பேதாபேத" தத்துவப்படி, முத்தி நிலையிலும் ஆன்மா சிவனோடு முற்றிலும் கரையாமல், தன் தனித்துவத்தைத் தக்கவைத்துக் கொண்டே சிவனருளில் திளைக்கிறது. இது காஷ்மீர சைவ அத்வைதம் அல்ல; தமிழ் சைவத்தின் தனித்துவமான கொடையாகும். இவ்வாறாக திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் தமிழ் சைவ சித்தாந்தத்தின் இரு பரிமாணங்களாகும்; திருமுறைகள் இறையனுபவத்தை வெளிப்படுத்த, மெய்கண்ட சாத்திரங்கள் அதனைத் தத்துவ ரீதியாக நிறுவுகின்றன.

## 7. முடிவுரை (Conclusion)

இவ்வாய்வு, சங்க கால "இயவுள்" வழிபாட்டில் வேரூன்றிய பழந்தமிழர் கடவுள் கொள்கை, திருமுறைகளின் பக்தி நெறி, மெய்கண்ட சாத்திரங்களின் தத்துவச் செம்மை மற்றும் வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் வழியாக தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்றதன் உச்சநிலையே சைவ சித்தாந்தம் என்பதை நிறுவுகிறது. பழந்தமிழர் மரபில் அன்பு, அறம், அருள் ஆகியவை இறையனுபவத்தின் அடிப்படைகளாகக் கருதப்பட்டன; பின்னர் சைவ சித்தாந்தம் அவற்றைத் தத்துவ வடிவில் ஒருங்கிணைத்து மனித வாழ்வின் உயரிய இலக்காக சிவகதியையும் முத்தியையும் விளக்கியது. காரைக்கால் அம்மையார் கூறும் சிவகதி, மாணிக்கவாசகர் உணர்த்தும் அன்புருகும் சிவானுபவம், மெய்கண்டர் வலியுறுத்தும் அருள்–அன்பு நெறி, வள்ளலார் எடுத்துரைக்கும் மரணமில்லாப் பெருவாழ்வு ஆகியவை ஒரே தமிழ்ச் சைவ ஆன்மிக மரபின் பல்வேறு வெளிப்பாடுகளாகும். எனவே சைவ சித்தாந்தம் என்பது வெளியில் இருந்து தோன்றிய புதிய தத்துவம் அல்ல; பழந்தமிழர் வாழ்வியலில் ஆழமாக வேரூன்றியிருந்த கடவுள் கொள்கையின் முழுமையான பரிணாமமும் தத்துவச் செம்மையுமாகும். இதனால் பழந்தமிழர் கடவுள் கொள்கையும் சைவ சித்தாந்தமும் இரு வேறுபட்ட மரபுகள் அல்ல; ஒரே ஆன்மிகச் சிந்தனையின் தொடர்ச்சியான வளர்ச்சி நிலைகளாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

## ஆதாரங்கள் (References)

[17] வை. இரத்தினசபாபதி, *Tirujñānasambandar: Ōr Āyvu*, 2 vols. (Chennai: University of Madras, 2000), vol. II, pp. 107–108.

[18] K. Sivaraman, *Śaivism in Philosophical Perspective: A Study of the Formative Concepts, Problems, and Methods of Śaiva Siddhānta* (Delhi: Motilal Banarsidass, 1973), pp. 77–92, for the analysis of *pati–paśu–pāśa* in Tamil Śaiva context.

[1.] தொல்காப்பியர். Tolkāppiyam: Poruḷatikāram. Ed. U. V. Cāminātaiyar. Chennai: Kabeer Press, 1920.

[2.] பன்னிரு திருமுறைகள். In: Panniru Tirumurai Padalgal. Chennai: Uma Padhippagam, 2004.

[3.] மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம். In: Kanchi Nagalinga Munivar, ed., Meikanda Saatthiram (Fourteen Sastras with Commentaries). Dharmapuram: Dharmapura Aadheenam, Reprint 2014.

[4.] வை.இரத்தினசபாபதி, Tirumuṟait Teḷivē Śivajñānabodham [திருமுறைத் தெளிவே சிவஞானபோதம்]. சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், 2004.

[5.] வை.இரத்தினசபாபதி Tirujñānasambandar: Ōr Āyvu, முதல் மற்றும் இரண்டாம் பகுதி. சென்னை: சென்னைப் பல்கலைக்கழக தத்துவத்துறை, 2000.

[6.] நல்லூர் சா.சரவணன், Śaiva Siddhānta Ceḻumāmaṇikaḷ [சைவ சித்தாந்தச் செழுமாமணிகள்]. சென்னை: வையவி பதிப்பகம், 2020.

[7.] நல்லூர் சா.சரவணன் Meykaṇṭār Aruḷiya Śivajñānabodham Vāḻviyal Āyvu Viḷakkam [மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் வாழ்வியல் ஆய்வு விளக்கம்]. சென்னை: நண்பர்கள் வெளியீடு, 2008.

[8.] நல்லூர் சா.சரவணன் (பதிப்பாசிரியர்). Murugan Munnē Varum Munnavan [முருகன் முன்னே வரும் முன்னவன்]. மயிலாப்பூர்: சைவ சித்தாந்தப்

[9.] பெருமன்றம், 2017.

[10.] Goodall, Dominic, Shaman Hatley, Harunaga Isaacson, and Srilata Raman, eds. Śaivism and the Tantric Traditions: Essays in Honour of Alexis G.J.S. Sanderson. Gonda Indological Studies, Vol. 22. Leiden: Brill, 2020.

[11.] Sivaraman, K. Śaivism in Philosophical Perspectives. Delhi: Motilal Banarsidass, 1973.